# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 203/2024 நாள்.9.9.2025

## PW1- திரு. ராஜா, க /பெ. திரு. ராஜன்

**பிரதிவாதிதரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்கில் முதல் பிரதிவாதி என் தாயார் என்றால் ஆமாம்.2ஆம் பிரதிவாதி அனிதா சகோதரி என்றால் ஆமாம். 3ஆம் பிரதிவாதி ஸ்ரீதர் என் சகோதரர் என்றால் ஆமாம். ஜீலியட்மேரி என் தாயார் தற்போது எங்கு வசிக்கிறார் என்றால் மேலதிருப்பந்துறுத்தி, அற்புதமாதாகோவில் தெரு, தம்பி வசிக்கும் வீட்டில் வசிக்கிறார். நான் புதுகோட்டை ரோடு நிர்மலாநகர், குழந்தைஏசுகோவில் பின்புறம் வசிக்கிறேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஹோட்டலில் கூலி வேலை செய்கிறேன். என்ன படித்துள்ளேன் என்றால் 12ஆம் வகுப்பு என் தம்பி என்ன செய்கிறார் என்றால் தெரியவில்லை. என் சகோதரி என்ன செய்கிறார் என்றால் திருமணம் ஆகி அவர் வீட்டில் இருக்கிறார். அப்பா உயிருடன் இருக்கும்போது தங்கைக்கு திருமணம் ஆகிவிட்டது. பிரமாண வாக்குமூலத்தில் நான் ஹோட்டலில் வேலை பார்த்ததை சொல்லவில்லை என்றால் ஆமாம். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இந்தியன், இந்து என்று சொல்லியுள்ளேனே நான் எப்படியாக உள்ளேன் என்றால் இந்துவாகதான் உள்ளேன். பிறப்பால் கிறிஸ்துவன். நான் இந்துவாக மாறியதற்கு அரசிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த ஆண்டு என்றால் 1997. நான் பாகபிரிவினை கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். கிறிஸ்துவர் முறையில் கேட்டுள்ளேனா, இந்து முறையில் கேட்டுள்ளேனா என்றால் இந்துமுறையில்தான் கேட்டுள்ளேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் எனது திருமணம் எங்கு வசிக்கிறேன் என்று சொல்லவில்லை என்றால் ஆமாம். என் திருமண வாழ்க்கை பொறுத்து சொல்லவில்லை என்றால் ஆமாம். எனக்கும் அஞ்சலின் ஜீலியட் என்பவருக்கும் கிறிஸ்துவ முறைப்படி திருமணம் நடந்தது என்றால் ஆமாம் விவகராத்து ஆகிவிட்டது. விவகாரத்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். குழந்தை உள்ளது என்றால் ஆமாம். பெண் குழந்தை அஞ்சலின் என்று பெயர். நான் தற்போது பிரான்சிஸ்மேரி என்கிற சங்கீதாவுடன் குடும்பம் நடத்துகிறேன் என்றால் ஆமாம். திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. குழந்தைகள் உள்ளதா என்றால் உள்ளது ஒரு பெண்குழந்தை பெயர் ரியோஜ். 2வது மனைவி ஏற்கனவே திருமணம் ஆனவர் என்றால் ஆமாம். அவர்களுக்குள் விவகாரத்து ஆகிவிட்டதா என்றால் தெரியாது. நான் Men Power Agentஆக செயல்பட்டேன் என்றால் ஆமாம். வெளிநாட்டிற்கு மற்றும் இந்தியாவில் இருக்கும் கம்பெனிகளுக்கு ஆட்களை அனுப்பினேன். Men power Agentஆக செயல்பட்டபோது என்னிடம் பணம் கொடுத்தவர்கள் செங்கிபட்டி காவல்நிலையத்தில் 2014 ஆம் ஆண்டு புகார் கொடுத்தார்கள் என்றால் ஆமாம். அவர்களுக்கெல்லாம் வெளிநாடு அனுப்புவதற்காக பணம் பெற்றுகொண்டு அனுப்பாததால் புகார் கொடுத்தார்கள் என்றால்

ஆமாம். அவ்வாறு புகார் கொடுத்தவர்களுக்கு பணம் கொடுத்து சமரசம் பேசி முடிக்கப்பட்டது என்றால் ஆமாம். யாரிடமிருந்து பணம் வாங்கினேன் என்றால் எனது தகப்பனாரிடம் பணம் வாங்கினேன். எவ்வளவு பணம் என்றால் ரூ 5லட்சம். முதல்மனைவி நகைகளை கேட்டு பிரச்சனை எனக்கு இருந்தது என்றால் ஆமாம் நகைகளை நான் அடமானம் வைக்கவில்லை நகைகள் என் அப்பாவிடம் இருந்தது. என் தகப்பனார் பணத்தை ரொக்கமாக கொடுத்தாரா என்றால் ஆமாம். அந்த பணம் அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் என் அப்பா 2004இல் VRS கொடுத்து ஒய்வு கொடுத்தார் அதிலிருந்து வந்த செட்டில்மெண்ட் பணம். மேற்சொன்ன விஷயத்தை பிரமாணவாக்மூலத்தில் ஏன் சொல்லவில்லை என்றால் நான் பாகவழக்குதான் போட்டுள்ளேன். என் அப்பா எனக்குரிய பாகத்தை சொத்தை விற்றுதான் எனக்கு மேற்படி பணத்தை கொடுத்தார் என்றால் இல்லை. எனக்கு சொத்து எங்கெல்லாம் இருக்கிறது என்றால் நடுகாவேரியில் உள்ளது, திருஆலம்பொழில் கிராமத்தில் உள்ளது, மேலதிருப்பந்துறுத்தி கூடுதலில் உள்ளது, தஞ்சாவூர் நாஞ்சிகோட்டை கிராமத்தில் உள்ளது. நடுபடுகையில் சொத்து உள்ளது என்றால் தவறு. நடுகாவேரியில் உள்ள சொத்தை யார் சாகுபடி செய்கிறார் என்றால் என் தம்பி ஸ்ரீதர் 18 மாவை சாகுபடி செய்கிறார். நடுகாவேரி கிராமத்தில் எனக்கு ஒதுக்கபட்ட நிலமானது உலகப்பநாட்டார் மகனுக்கு என்னால் கிரயம் செய்து கொடுக்கபட்டது என்றால் எனக்கு நிலம் ஒதுக்கப்படவில்லை. எனக்கு பிரச்சனை அதிகமாக இருந்த காலத்தில் நடுகாவேரி சொத்து மட்டும் எனக்கு வேண்டும் என்றும், மற்ற சொத்துக்களை கூட்டுகுடும்ப வாரிசுகள் எடுத்து கொள்ளட்டும் என்று சொல்லி நடுகாவேரி சொத்தை நான் கிரயம் செய்து கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு கிரயம் செய்து கொடுக்க குடும்ப உறுப்பினர்கள் சம்மதம் கொடுத்தார்கள் என்றும் அவ்வாறு விற்றுவிட்டு தற்போது இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. உலகப்பநாட்டார் மகன் செந்தில்குமாருக்கு விற்றதை கிரயமாகாததால் அனுகூலமாக கொண்டு தற்போது பாகம் கோரி வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி நிலத்திற்கு குழி ஒன்றுக்கு ரூ 2801 வீதம் ஆகதொகை 21,00,000 பெற்று கொண்டு தற்போது வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நடுபடுகையில் சொத்து இருந்தது என்றும் அதை தனபால் மனைவிக்கு விற்றுள்ளோம் என்றால் குடும்பத்தில் உள்ள எல்லோரும் சேர்ந்து விற்றோம். தனபால் மனைவியிடம் இருந்து ரூ.53,00,000 பணம் நான் வாங்கிகொண்டேன் என்றால் எனது தாயார் தான் வாங்கினார். என் தாயார் வாங்கினார் என்று வழக்கிற்காக சொல்கிறேன், தனபாலிடமிருந்தும் என் மனைவியிடமிருந்தும் என்னால்தான் பணம் வாங்கபட்டது என்றால் சரியல்ல. என் பெயரில் மனை உள்ளதா என்றால் அரசாங்கத்தால் கொடுக்கபட்ட மனை பட்டா உள்ளது. 742/1, 742/13 ஆகிய புலஎண்களில் இரண்டு உள்ளது என்றால் ஆமாம். மேற்சொன்ன மனைகளை ஸ்ரீராம் சிட்டியூனியன் வங்கியில் நான் அடமானம் வைத்து கடன் வாங்கினேன் என்றால் இல்லை. ஸ்ரீராம் சிட்டி யூனியன் வங்கியில் கடன் வாங்கி திரும்ப செலுத்தாதல் அதற்காக மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் என்மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். நடுபடுகை கிராமத்தில் குடும்பத்திற்கு மனை உள்ளது என்றால் இல்லை. நான் நிர்மலா நகரில்

குடியிருக்கும் வீட்டின் விபரங்களை என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் என் அப்பா பெயரில்தான் பத்திரம் பட்டா உள்ளது. அப்பா இறந்தபிறகு கூட்டு பட்டாவாக உள்ளது. அது என்ன வகை வீடு என்றால் ஒட்டு கட்டிடம். கீழ்தளத்தில் நான் வசிக்கிறேன், மேல்தளம் பூட்டிஉள்ளது. அதில் முன் வாடகைக்கு இருந்தார்கள் என்றால் ஆமாம். வாடகைக்கு இருந்தவர்கள் என் தம்பி ஸ்ரீதரால் அமர்த்தபட்டவர்கள் என்றால் இல்லை என்னால் அமர்த்தபட்டவர்கள். ரூ75,00,000 வரை என்னுடைய பாகத்திற்காக குடும்பத்திலிருந்து பெற்றுகொண்டேன் என்றால் இல்லை. என் பாகத்தை ஏற்கனவே கொடுத்துவிட்டதால் எனது தந்தை அவர் உயிருடன் இருக்கும் காலத்திலேயே ஸ்ரீதருக்கு உயில் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் என் அப்பா எழுதவில்லை. உயில் எழுதி வைத்ததன் அடிப்படையில் ஸ்ரீதர் வங்கியில் கடன் வாங்கி வீட்டை அபிவிருத்தி செய்தார் என்றால் தெரியாது. வங்கிக்கு உரிய தொகையையும் மாதமாதம் ஸ்ரீதர் செலுத்துகிறார் என்றால் தெரியாது. நான் அந்த வீட்டில் குடியிருந்து கொண்டு காலி செய்ய மறுப்பதால் எனக்கு எதிராக மருத்துவகல்லூரி காவல்நிலையத்தில் புகார் கொடுக்கபட்டது என்றால் நான் புகார் கொடுத்துள்ளேன். நான் புகார் கொடுக்கவில்லை என்றும் எனது தம்பி ஸ்ரீதர் நான் ஆக்கிரமித்ததாக சொல்லி புகார் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. என் குடும்பத்தில் ஏற்பட்ட பாகபிரிவினையை எழுத்து மூலமாக எழுதி பதிவு செய்யப்படாததை சாதகமாக கொண்டு பொய்யான தகவலின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகம் பிரிக்கப்படவில்லை. நான் பொறுப்புள்ள நபராக நடக்காததால் குடும்பத்தில் செயல்படாததால் பல நபர்களை ஏமாற்றியதால் குடும்பத்தில் எனது பாகம் பிரித்து கொடுக்கபட்டது என்றால் இல்லை. என் அப்பாவால் சுயமாக சம்பாதிக்கபட்ட சொத்துதான் நிர்மலா நகர் வீடு என்றால் எனது தாத்தாவின் உதவியால் வாங்கபட்டது. அவ்வாறு நான் சொல்வது தவறு என்றும் நிர்மலாநகர் வீடு எனது தகப்பனாரின் சுயசம்பாத்தியம் என்றால் இல்லை. சுயசம்பாத்தியத்தில் வாங்கபட்ட சொத்து என்பதால் அவருக்கு உயில் எழுதி வைக்க உரிமை உள்ளது என்றால் இல்லை. 5.1.2006 இல் உயில் எழுதி வைத்து அந்த ஆவணமானது 3/2006 ஆக மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 18.4.1981 தேதியிட்ட நான் தாக்கல் செயத கிரய சாசன பத்திரம் வா.சா.ஆ.9 எந்த சொத்து என்றால் நடுகாவேரி கிராமத்தில் உள்ள வயக்காடு. அது என் தகப்பனாரால் வாங்கபட்ட தனிபட்ட சொத்து என்றால் இல்லை. நிர்மலாநகர் வீட்டிற்கு உள்ள பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் இல்லை. நான் கூட்டுகுடும்பத்துடன் இருந்தேன் என்றும் எப்போது வெளியே வந்தேன் என்று என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். என் தாயார் , சகோதரி, சகோதரன் ஆகியோரிடமிருந்து எனக்குரிய பாகத்தை வாங்கி கொண்டேன் என்றும் தற்போது ஒரு அடாத வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் இல்லை. நான் குடியிருக்கும் வீட்டிற்கு மாததவணை என் சகோதரர் செலுத்தி வருகிறார் என்றும் அது அவருக்கு சொந்தமான வீடு என்றும் சொன்னால் அது என் அப்பாவுக்கு சொந்தமான சொத்து. எனக்கு அந்த வீட்டில் உரிமை இல்லை என்றும் அத்துமீறி நுழைந்து குடியிருந்து வருகிறேன் என்றால் எனது அப்பா சொன்னதன்பேரில் 2017முதல் அந்த வீட்டில் வசித்து

வருகிறேன். நான் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றும் எந்தசொத்துக்களும் பிரிபடாமல் இல்லை என்றும், சொன்னால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.